**SC No.122/2025**

**13.02.2026**

**PW 2**

**திருமதி சுசீலா**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(Accused present).**

**குறுக்கு விசாரணை**

கிராம நிர்வாக அலுவலரின் கிராம உதவியாளர் என்பதால் எனக்கு கிராம உதவியாளரின் கையேடு மற்றும் அது தொடர்பான அனைத்து விபரங்களும் எனக்கு நன்கு தெரியும். கிராம நிர்வாக அலுவலர் இந்த வழக்கில் சாட்சியாக இருப்பதால் நானும் இந்த வழக்கில் சாட்சியாக இருக்கிறேன் என்றால் ஆமாம். இந்த வழக்கு தொடர்பாக என்னை திருவாரூர் தாலுகா காவல் நிலையத்தில் ஒரு முறை விசாரித்தார்கள். 01.05.2025 ம் தேதி நான் விசாரணைக்காக ஏதேனும் ஒத்துழைப்பு செய்தேனா என்றால் இல்லை. வழக்கின் எதிரி வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு முன்பாகவே இந்த வழக்கின் முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியும். ஆஜர் எதிரி குடியிருக்ககூடிய பகுதி எங்களது கிராம நிர்வாக அலுவலக சரக எல்லைக்குட்பட்ட

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:51:28 +0530

பகுதி அல்ல என்றால் சரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எங்கள் கிராம நிர்வாக எல்லைக்குட்பட்டதா என்றால் ஆம். இந்த வழக்கு தொடர்பாக நான் 4 விதமான ஆவணங்களில் கையெழுத்துக்கள் போட்டுள்ளேன். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் போலீசாரால் தயாரித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த ஆவணங்களில் நானும் என்னுடைய கிராம நிர்வாக அலுவலரும் கையெழுத்துக்கள் போட்டோம். இந்த வழக்கு தொடர்பான விபரங்கள் எதுவும் கிடையாது. நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் ஆமாம். முதல் விசாரணையில் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியம் சொல்லியுள்ளேன் என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:51:46 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

SC No.122/2025

13.02.2026

PW 3

**திரு கலையரசன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

(**Accused present**).

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தப்பட்ட விபரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது. ஆஜர் எதிரிக்கும் அவரது கணவருக்குமிடையே எந்தவித குடும்ப பிரச்சனையும் இருந்தது கிடையாது, அவர்களுக்குள் குடும்ப பிரச்சனை இருந்ததாக நான் கேள்விபடவுமில்லை. இறந்துபோன அனந்தபத்மநாபன் மது பழக்கத்திற்கு அடிமையானவர் என்றால் சரி. ஊரில் பல பேரிடம் வம்பு செய்துகொண்டு பிரச்சனை செய்யக்கூடிய நபர் அனந்தபத்மநாபன் என்றால் சரி. அதனால் ஊரில் பல நபர்களிடம் விரோதம் உண்டு என்றால் சரி. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை, விசாரித்திருந்தால் மேற்படி விபரங்களை சொல்லியிருப்பேன். ஆஜர்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:51:55 +0530

எதிரி, எதிரியின் மகன், மகள் ஆகியோரை அனந்தபத்மநாபன் இறந்த அன்றே திருவாரூர் தாலுகா காவல் துறையினர் அழைத்து சென்று விட்டார்கள் என்றால் சரி. கிட்டதட்ட 10 நாட்களுக்கு மேல் ஆஜர் எதிரி காவல் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியும். இடைபட்ட 10 நாட்களும் மாலை சுமார் 6.00 மணிக்கு திருவாரூரில் உள்ள பெண்கள் பாதுகாப்பகத்தில் (Home) தங்க வைத்து பின்னர் காலை 7.00 மணியளவில் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விடுவார்கள் என்றால் சரி. நாங்கள் தொடர்ந்து காவல் நிலையத்தில் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் கேட்டு வந்த நிலையில் ஒருநாள் திடீரென்று ஆஜர் எதிரியை ஜெயிலுக்கு அனுப்பி விட்டதாக காவல் துறையில் சொன்னார்கள்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:52:01 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.